# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 02.09.2026**

**முன்னிலை**

**திரு. அபய் குமார் சிங் இ.கா.ப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 776/F/2023**

திரு.வெ.திருப்பதி .. புகார்தாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
கழகம் (சேலம்) லிட்., .. பொது அதிகார அமைப்பு
12, இராமகிருஷ்ணா சாலை,
சேலம் மாவட்டம் - 636 007.

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீதான நேரடி விசாரணை 23.07.2026 அன்று மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை தொடர்ந்து, பொது அதிகார அமைப்பின் சார்பாக தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.S.செல்வகுமார், உதவி மேலாளர் (சட்டம்-கூட்டாண்மை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., சேலம் மாவட்டம் அவர்கள் இன்று (02.09.2026) ஆணையத்தின் முன்பு நேரில் ஆஜராகி, அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் திரு.K.பழனிவேல் (ஓய்வு), உதவி மேலாளர் (தணிக்கை-கூட்டாண்மை), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிட்., சேலம் மாவட்டம் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் நேரில் சமர்ப்பித்தார்.

> **“அவ்வெழுத்துமூல விளக்கத்தில் இப்போக்குவரத்துக் கழகத்தில் சேலம் மண்டலத்தில் 18 கிளைகளும், தருமபுரி மண்டலத்தில் 14 கிளைகளும் செயல்பட்டு வருகிறது என்றும், மனதாரரின் 6(1)-ன்கீழான 18.01.2023 நாளிட்ட மனுவில் கோரியிருந்து இனம் 1 முதல் 5 வரையிலான தகவல்கள் தருமபுரி மண்டலத்தைச் சார்ந்தது என்றும், தருமபுரி மண்டலம், திருப்பத்தூர் கிளை அலுவலகத்திற்கு**

**அனுப்பப்பட்டு 14.02.2023 மற்றும் 16.02.2023 அன்று தகவல்கள் பெறப்பட்டதை தொடர்ந்து 08.03.2023 நாளிட்ட கடிதம் மூலமாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.”**

2. இவ்வாணையம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் அவர்களின் எழுத்து மூல விளக்கத்தினை ஏற்று இப்புகார் மனுவின் மீதான விசாரணையை இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடுகிறது.

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 776/F/2023**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

1. **பொதுத் தகவல் அலுவலர் /**
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
   **கழகம் (சேலம்) லிட்.,**
   **எண்.12, இராமகிருஷ்ணா சாலை,**
   **சேலம் மாவட்டம் - 636 007.**

2. **திரு.K.பழனிவேல்**
   **(அப்போதைய பொதுதகவல் அலுவலர்)**
   உதவி மேலாளர் (தணிக்கை - கூட்டாண்மை),
   தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்
   கழகம் (சேலம்) லிட்., சேலம் மாவட்டம்
   **(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வழியாக)**

**மனுதாரர்**
திரு.வெ.திருப்பதி,
த/பெ.வெங்கடேசன்,
மல்லிநாயனப்பள்ளி அஞ்சல்,
ஜாமத்தோட்டம் கிராமம்,
கிருஷ்ணகிரி வட்டம்,
கிருஷ்ணகிரி - 635 120.

**நகல்**
பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை - 35 (For follow up)

Copy to file: RVPA